## National Commission for Scheduled Tribes (NCST)
## மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம் (NCST)

அரசியல் சட்டம் (89 வது திருத்தம்) ஷரத்து 338 மற்றும் திருத்தப்பட்ட 338-A 2003-ன் படி, மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம் (NCST) நிறுவப்பட்டது. இந்த சட்டதிருத்தத்தின்படி, மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம் இரண்டு வெவ்வேறு ஆணையங்களாகப் பிரிக்கப்பட்டது. அவைகள் (i) தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தேசிய ஆணையம் (NCSC) மற்றும் (ii) மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையம் (NCST) w.e.f 19 பிப்ரவரி 2004.

**Functions of the Commission**
**ஆணையத்தின் பணிகள்:**

(பிரிவு 5 ஷரத்து 338-A)

1. அரசியல் சாசனப்படியும் அல்லது மற்ற சட்டங்களின் கீழ் அல்லது அரசாணையின் கீழ், மலைவாழ் மக்களின் பாதுகாப்பிற்கான புலனாய்வு மற்றும் மேற்பார்வையிடுவதற்காகவும் அவற்றை மதிப்பீடு செய்வதற்காகவும்,
2. மலைவாழ் மக்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் தொடர்பான தனிப்புகார்களை விசாரிக்கவும்,
3. மலைவாழ் மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டமிடும் செயல்பாடுகளில் பங்கேற்கவும் ஆலோசனை கூறவும், மேலும் யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களில் இவர்களின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும்,
4. மலைவாழ் மக்களுக்கான சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் தொடர்பாகவும், அவர்களின் பாதுகாப்பிற்கான பணிகளில் தேவையானவற்றை நடைமுறைப்படுத்துவதைப் பற்றியும் ஆண்டிற்கு ஒருமுறை ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும்,
5. மலைவாழ் மக்களுக்கு தேவையான மற்ற பணிகளை செய்வதற்கு ஜனாதிபதியால் பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வர,
6. மலைவாழ் மக்களின் பாதுகாப்பு, நலம் மற்றும் மேம்பாடு தொடர்பாகவும் கீழ்வரும் பல்வேறு பணிகளையும் ஆணையம் செய்து வருகிறது.

   i. வனப்பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்கள் தயாரிக்கும் சிறுவனப் பொருட்களின் மீது உரிமை வழங்குவதற்குத் தேவையான முயற்சிகளை எடுத்தல்.

   ii. கனிம வளங்கள், நீர் ஆதாரங்கள் போன்றவைகளின் மீது மலைவாழ் மக்களுக்கு உள்ள உரிமையை பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்தல்.

iii. மலைவாழ் மக்களுக்கு சாதகமான திட்டங்களை வகுக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் முயற்சிகளை எடுத்தல்.

iv. வளர்ச்சித் திட்டங்களால் இடம் பெயர்ந்த மலைவாழ் மக்களின் துரித நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான முயற்சிகளை எடுத்தல்.

v. ஏற்கனவே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மறு குடியமர்த்தப்பட்ட மலைவாழ் மக்களை தனிமைப்படுத்தப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்தல்.

vi. சமூக வனக் காடுகள் திட்டத்தை செயல்படுத்துவதிலும், வனப்பகுதிகளை பாதுகாப்பதிலும் மலைவாழ் மக்களின் முழு ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் வெளிக் கொணர்வதற்கான முயற்சிகளை எடுத்தல்.

vii. 1996 சட்டப்படி (அட்டவணைப் பகுதிகளுக்கு விரிவுபடுத்துதல்) பஞ்சாயத்துக்களின் நலத்திட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிகளை எடுத்தல்.

viii. சுற்றுச்சூழலை கெடுத்து, நிலத்தின் தன்மையை பாதித்து, தொடர்ச்சியாக மலைவாழ் மக்களை பலவீனப்படுத்தும் மாற்று பயிர் சாகுபடி முறையை குறைத்து பின்னர் முழுவதுமாக நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்தல்.

ix. மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையத்தின் விரிவாக்கப்பட்ட கருத்துரு சம்பந்தமான 23.08.2005 தேதியிட்ட மலைவாழ் மக்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் குறிப்பாணையின் நகல்.

x. மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையத்தை வலுப்படுத்துவதற்கான திட்ட அறிக்கை சம்மந்தமாக மலைவாழ் மக்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் 21.10.2008 தேதியிட்ட நகல்.

xi. மலைவாழ் மக்கள் மேம்பாட்டு அமைச்சகத்திற்கு NCST தலைவரால் 13.01.2011 தேதியில் எழுதப்பட்ட கடிதம்.

xii. மிக முக்கிய நிலுவை பிரச்சினைகள் சம்மந்தமாக மலைவாழ் மக்கள் மேம்பாட்டு அமைச்சகத்திற்கு PMO அவர்களால் எழுதப்பட்ட 24.05.2010 தேதியிட்ட கடிதம்.

xiii. மலைவாழ் மக்களுக்கான தேசிய ஆணையத்தின் சிறப்புமிக்க செயல்பாடுகளில் உள்ளடங்கிய சிக்கலான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மலைவாழ் மக்கள் மேம்பாட்டு அமைச்சகத்தின் அமைச்சர் அவர்களுக்கு NCST –ன் துணைத்தலைவர் அவர்களால் எழுதப்பட்ட 05.03.2010 தேதியிட்ட கடிதம்.